# சண்டைச்சேவல்

மூலம்: நிசாங்க விஜேமானே

தமிழில்: கதி

கண்களில் கோபம் தெறிக்கப் பார்வையாலே சுட்டெரிக்கப் போவதுபோல் தனது சண்டைச் சேவலைப் பார்த்தான் சிற்றா. ஈஸ்வரனின் பார்வையாய் இருந்தால் சாம்பராயிருக்கும். கொதிக்கக் கொதிக்க ஆத்திரமெல்லாவற்றையும் கண்களில் திரட்டி ஓர் ஒளிக்கற்றையாக்கி சேவலை எரித்துவிட முயன்று கொண்டிருந்தான்.

சேவலுக்கு அவனது தீர்மானம் விளங்கியது. அதன் செட்டைகள் சிதறிப் போயிருந்தன. கொண்டையில் இருந்து இரத்தம் வழிந்து கொண்டிருந்தது. வாழ்நாளில் முதல்முறையாக கொண்டை துவண்டு தொங்க இரக்கத்தை இறைஞ்சுவதுபோல் அது நின்று கொண்டிருந்தது. தனது பெருமை மிக்க கடந்த காலச் சிம்மாசனத்தில் இருந்து பரிதாப நிலைக்கு வீழ்ந்த மனக் குழப்பத்துடன் காற்றுப் போன துருத்தியைப் போல எசமானின் காலடியில் நின்றது. தொண்டையில் இருந்து பரிதாப ஒலிகள் வந்தவண்ணம் இருந்தன.

காற்று மென்மையாகச் சுழன்று தரையில் சிதறிய சிறகுகளைச் சேர்த்தது. யாருமே அங்கில்லை. மாலை வேளை நெருங்கி அரசனின் கோபத்தைத் தணி எனக் கேட்டது. சிற்றா வேறு திசையில் சிந்தித்தான். கோபத்தை எப்படி இன்னும் உக்கிரமாக்கிக் கொள்ளலாம். ஆனால் எந்த விதத்திலும் அதற்கு உதவியின்றி இருந்தது.

சேவலைக் காலில் பிடித்து மீண்டும் வீசி எறிந்தான். இம்முறையும் அது மயிரிழையில் தப்பியது. செட்டைகள் விரியத் தட்டையாக பேப்பர் ஒன்று மிதப்பதுபோல் தரையில் கிடந்தது.

“இந்த ‘வேசி மகனி’ற்கு பூனையின் உயிர்போல. சரி வா போகலாம்”

கோபத்துடன் சிற்றா சொன்னான். தேயிலைத் தோட்ட லயன்களுக்கும் அப்பால் வெகுதூரத்தில் முட்புதர்கள் நிறைந்த நிலப்பரப்பில் இருந்து ‘திப்புவ’* தாளத்தில் பறை ஒலி கேட்டது.

“றம்பு - டக்க - டக்க - றம்பு டக்க டும் - டும் - டும்”

காமன் கூத்துத் தொடங்கி விட்டது.

அவனது மனம் மிகவும் தளர்ந்திருந்தது. தனது நிலையும் சேவலின் நிலைக்குத் தாழ்ந்தது போல் உணர்ந்தான். சேவலைக் காலில் பிடித்துத் தூக்கிக் கொண்டு வீட்டிற்குப் போனான்.

வீட்டில் அந்தச் சேவலைக் கொன்றான்.

சேவலைக் கொல்ல முதல் அதற்கு முக்கியமான பிரசங்கமொன்றை வைத்தான். அடுத்த பிறப்பில் அது எவ்வாறு வாழவேண்டுமென பிரசங்கம் அமைந்திருந்தது.

கடைசி நிமிடம்வரை தன் எசமான் தன்னைக் கொல்வான் எனச் சேவல் நினைக்கவேயில்லை. அதற்குத் தேவையாக இருந்ததெல்லாம் சிதைந்து போன தன் உடலிற்கு மசாஜும் சிறிதளவு தண்ணீரும் தான்.

“உனது மறுபிறப்பில் நீ எதற்கும் அஞ்சாத சண்டைக்காரனாக இருக்கவேண்டும். துணிவானவனாக இருக்கவேண்டும். உனது எதிரியைக் கண்டு நீ பயப்படக் கூடாது. எதிரியையோ எதிரியின் பாய்ச்சலைக் கண்டோ பயப்படக் கூடாது. உனக்கு விளங்குகிறதா.... நாயே!”

கடைசி நிமிடங்களில் சிற்றா அன்பாகவே பேசியது போல் தோன்றிற்று. அதன் கழுத்தில் கைவைத்தபோது தனது காயப்பட்ட உடம்பைத் தடவி விடப் போகிறான் என்றுதான் அது நினைத்தது. சிற்றா திடீரென அதன் கழுத்தைத் திருகி அதன் பின் தன் கையைச் சோர விட்டான்.

நடந்ததை நம்பமுடியாத பார்வை அதன் கண்களில் தேங்கி உறைந்திருந்தது.

*****

சண்டை மைதானத்தை இரவு நெருங்கிவிட்டிருந்தது. மைதானம் மாலைக்காற்றில் பறக்கும் இறகுகளைக் கவனத்தில் எடுக்கவில்லை. காலையில் இருந்து இதுவரை நடந்தவைகளை அது அசை போட்டுக் கொண்டிருந்தது. எரமோனியா மரங்கள், தான்தோன்றியாக வளர்ந்திருந்த கோப்பி மரங்கள், கரடுமுரடான நிலத்திற்கு மேல் நீட்டிக் கொண்டிருக்கும் பாறைகள் எல்லாம் அங்கு வந்திருந்த மனிதர்களின் சாறங்களினூடு சண்டையைப் பார்த்திருந்தன.

“என்ன நடந்தது? என்ன நடந்தது?”

காற்று அவைகளைக் கேட்டது.

*****

“முதலில் வந்தது நிமால் விற்றாச்சி”

கதையைத் தொடக்கி வைத்தது தான்தோன்றித் தேயிலைச் செடி.




"அவனிற்கு இதுதான் பெயராயிருந்தும் எல்லோருமே அவனை சிற்றா என்றுதான் கூப்பிடுவார்கள்"

சண்டைக் கோழி ஒன்று, அவன் அங்கு இல்லை என்பதை உறுதிப்படுத்திக் கொண்டு, மறைமுகக் கேலி கலந்த குரலில் சொன்னது.

எப்போதும் போல் அவன் கம்பீரமாகத்தான் தெரிந்தான். அவன் வெற்றியாளன். எண்ணை விட்டுத் தலை வாரி இருந்தான். தலையில் சிவப்புக் கைக்குட்டை கட்டி இருந்தான். கையிலிருந்த சண்டைச் சேவலும் பார்வைக்கு நன்றாகத்தான் இருந்தது. என்ன அதன் நிறத்தில் சிவப்பு கொஞ்சம் அதிகமாகத் தெரிந்தது. சண்டைக்கு அவன் அதனை இதுவரை கொண்டு வரவில்லை. எந்த விதத்திலும் தோற்றுவிடக் கூடாதென சிற்றா ஓர் சேவலைப் பழக்குகிறானெனக் கேள்விப்பட்டிருந்தோம். அதன் சிறகுகளுக்கும் எண்ணை பூசி இருந்தது. இயற்கையாகவே கம்பீரம் வாய்க்கப் பெற்ற சேவல். அதன் கண்களினோரத்தில் கூடப் பெருமையின் மமதை தெரிந்தது.

என்னவோ தெரியவில்லை. சிற்றா அடிக்கடி மூக்கைத் துடைத்துக் கொண்டு நின்றான். காலைப் பனி அவனுக்கு தடிமலைக் கொடுத்திருக்குமோ? அவனின் கண்களின் கரையில் நித்திரையில்லாமையின் அசதி தெரிந்தது. அது தவிர விசேடமாக எதுவும் தெரியவில்லை

"ஏன் பூடகமாகச் சிரிக்கின்றாய்?"

தேயிலைச் செடி காற்றைக் கேட்டுக் கொண்டே கதையைத் தொடர்ந்தது. மெதுமெதுவாக ஓரிருவராக மைதானம் நிறையத் தொடங்கியது. காமன் கூத்துப் பண்டிகை என்பதால் எல்லோரும் அழகாக உடுத்தி இருந்தனர். பலர் சேவலை வந்து பார்த்துப் பாராட்டினர்.

"நல்ல சாமான்"

"நல்லாச் சண்டை பிடிக்கும்"

இப்படித் தொடர்ந்தது அவர்கள் பாராட்டுக்கள். கடைசியாகக் கோபாலன் வந்தான். எல்லோரது பார்வையும் அவன் மேல் திரும்பியது.

நீளக்கை சேட் போட்டிருந்த அவன் தலையில் கறுப்புத் துணி கட்டி இருந்தான். நெற்றியில் திருநீறு தெரிந்தது. கரு கரு என அடர்ந்த கறுப்பில் அவனது சேவல். ஓர் பார்வையிலேயே அது இந்தப் பிராந்தியத்தைச் சேர்ந்ததில்லையெனச் சொல்லிவிடலாம்.

மெலிந்த நீள்வாகான உடல், கருஞ்சிவப்புக் கண்கள், நகங்கள் நீண்டு மிகக் கூர்மையாக இருந்தன. தோற்றத்தில் மெலிந்ததாயினும் தசைநார்கள் இறுகித் திரண்டிருந்தன. கொண்டை கூடக் கறுப்பாக இருந்தது. ஆனாலும் அதன் தோற்றம் எதைப் பற்றியும் எதற்கும் கட்டுப்படாத சண்டியனின் தோற்றத்தை ஒத்திருக்கவில்லை.

"அண்ணே! இது என்ன இனம்?"

ஒரு சிறுவன் கேட்டான். நெடுநேர யோசனைக்குப் பின் கோபால் பதில் சொன்னான்.

"இது இந்தியச் சண்டைச் சாவல்"

******

சிற்றா கோபாலின் சேவலைப் பற்றிப் பெரிதாக அலட்டிக் கொள்ளவில்லை. இந்தச் சேவலைப்பற்றித் தானா எல்லாரும் பெரிதாகக் கதைத்தார்களென நினைத்துக் கொண்டான். ஆயினும் ஏதோ ஒன்று அவன் அமைதியைக் குலைத்தது.

"நேற்றைய இரவில் நித்திரையில் பல கெட்ட சகுனங்கள் தெரிந்தன. கெட்ட கனவுகள்.... அவனுடன் படுத்திருந்த பெண் கூட குறை கூறிக்கொண்டு கிடந்தாள். இவைகளைப்பற்றி சிந்தித்திருப்பானோ?"

காற்றின் மனதில் சிந்தனை இவ்வாறு ஓடியது.

"பின்பு"

"பின்பு பந்தயங் கட்டத் தொடங்கினார்கள்"

"சிவப்பு வெல்லும்"

"கறுப்பு தோற்கப் போகிறது"

ஐம்பதிற்கு இருபத்தைந்து பந்தயங்கள் தொடர்ந்தன. கோபாலிற்கும் சிற்றாவிற்குமான பந்தயம் வித்தியாசமானது. இந்த முடிவு நீண்ட காலத்திற்கு முன்பேயே இருவராலும் ஒத்துக் கொள்ளப் பட்ட ஒன்றுதான். இன்று அதனை மீள உறுதிப்படுத்திக் கொண்டனர்.

"பணத்திற்காகவல்ல இந்தச் சண்டை"

ஓர் இளைய கிப்பிற்றியச் செடிக்கு இந்த இரகசியம் தெரிந்திருந்தது.

"எனது சகோதரியுடனான உறவை நீ விட்டு விடவேண்டும். சேவல்களிடம் இந்த முடிவை விட்டு விடுவதைத் தவிர வேறொன்றும் எனக்குத் தெரியவில்லை."

கோபால் சொன்னான்.

சிற்றா இதைக் கேட்டு ஓர் கணம் அதிர்ந்து விட்டான். சிறிதளவேனும் பயமின்றிக் கோபால் இதனைச் சொன்னது காரணமாயிருக்கலாம். அப்படி இருந்தும் அவர்களுக்குள்ளான பந்தயத்தைக் கேட்கத்தான் சிற்றா காத்திருந்தான். காற்றும் அதனைத்தான் உறுதி செய்தது.

இன்று காலை சேவலைக் கையிலெடுக்கையில் இவைகளெல்லாம் அவன் மனதில் வந்து போனது.

"இன்று நீ வித்தியாசமான ஒரு பந்தயத்திற்குப் போகிறாய்... கோபால் எப்படியும் போகலாம். அதை நான் ஒரு பொருட்டாக எடுக்கவில்லை."

அன்றிரவு முழுவதும் அவனுடனே கூட இருந்த காற்று அவனை விட்டு விலகிப் போனது.

காலையில் இருந்தே நான் தோற்றுப் போகலாமென சிற்றா நினைத்திருந்தாலும் வழமைபோல் கோபாலைக் கோபமாகப் பார்த்தான்.

"சரி அவ்வளவுதானே? எனது சேவல் வென்றால் நாமிருவரும் மீண்டும் சேவல் சண்டையிடப் போவதில்லை சரியா?"

இன்று சிற்றா பந்தயத்தை தானே சொல்ல வேண்டுமென்று உறுதியாக நின்றான்.

"சரி"

மெதுவாகப் பறைச் சத்தம் ஒப்பாரியைப் போல உச்சத்திற்குச் சென்றது. நேரம் வந்து விட்டதைத் சொல்வதுபோல் டுறாம் - டுறாம் - டுறாம் - டக்க - டக்க - டக்க என முழங்கின.

சண்டை தொடங்கியபோது எட்டே முக்கால் மணியளவில் இருக்கும். சேவல்கள் தங்கள் சண்டையிருக்கையில் இருந்து பாய்ந்து இறங்கின. அலகுகளைப் பதித்து நிலம் பார்த்து வந்த அவை மனிதர்களைப் போல ஒருவருக்கொருவர் வந்தனம் தெரிவித்துக் கொண்டன. இது ஒரு நீண்ட சண்டையாக இருக்கப் போகிறதென்பதை நாங்கள்தான் முதன் முதலில் தெரிந்து கொண்டோம். மனிதர்களுக்கு அப்போது அது தெரிந்திருக்கவில்லை. எனவே ஆடாது அசையாது மனிதர்களின் தலைக்கு மேலால் சண்டையைப் பார்த்துக் கொண்டிருந்தோம்.

சேவல்கள் ஒன்றின்மீது மற்றொன்று உடனடியாகப் பாய்ந்தன. சண்டை தொடங்கி விட்டது. பத்துப் பதினைந்து நூற்றாண்டுகளாக அடக்கி வைத்திருந்த ஆத்திரம் கட்டவிழ்ந்ததுபோல் சண்டை உக்கிரமாக நடந்தது. முதல் சுற்றில் இரண்டும் ஓர் கும்பலாக ஒன்றின் மேல் மற்றொன்று விழுந்தது. எழுந்து பிரிந்து மீண்டும் தாக்கத் தொடங்கின. கறுப்புச் சேவல் உயரக் காற்றிலெழும்பிச் சிவப்பிற்கு ஓர் அறை அறைந்தது. கூட்டம் ஓர் கணம் திகைத்துப் போய் இருந்தது.

அதன் பின்புதான் கூட்டம் கறுப்புச் சேவலை கணக்கிலெடுத்துப் பார்த்தது. பலவித கதைகள் கூட்டத்தில் பரிமாறத் தொடங்கியது.

"இதன் முழுச் சந்ததியினரும் இந்தியாவில்தானாம்; சண்டைக்கென்றே இனப்பெருக்கம் செய்யப்பட்டதாம்; அதன் உடம்பைப் பார்... எண்ணைபோல் பளபளக்கிறது. ரத்தா*விடம் கொழுப்புத்தான் வேறொன்றுமில்லை."

திடீரெனப் பாய்ந்த ரத்தா களுவா*வின் கழுத்துச் சதையின் ஓர் துண்டைச் சிறகுடன் பிய்த்தெடுத்தது.

கண்களைக்கூட வெட்டி முழிக்காது கோபாலன் தனது சேவலை வழிநடத்திக் கொண்டிருந்தான். இந்தச் சேவல்மேல் பெருநம்பிக்கை கொண்டிருந்தான். இந்தச் சேவலின் தலைமுறைச் சரித்திரம் அப்பழுக்கற்றது. பல சண்டைகளில் பங்கெடுத்து எதிலுமே தோற்காதது. அவனது மைத்துனன் சேவலை அவனிடம் கொடுக்கும் பொழுது சொல்லி இருந்தார். சகோதரியைப் பார்க்க இந்தியாவிலிருந்து அவர் வந்திருக்கிறாராம். இந்தக் கதைகளும் இப்போது மைதானத்தில் பேசப்பட்டன.

சிற்றா தனது சேவலை வழமை போல வழிநடாத்தினான். யாரிடமும் அவன் இதுவரை தோற்றதில்லை. அப்படித் தோற்றிருந்தால் பெரிய தொகையொன்று கைமாறியதன் பின்னால்தானிருக்கும். அவனிற்கும் தன் சேவல்மீது அசைக்க முடியாத நம்பிக்கை. பழைய கதைகளில் வருவதுபோல சேவலின் உடலினுள் அவன் உயிர் புகுந்தது போலத்தான் அவன் நடந்து கொள்வான்.

கோபால் பக்கம் திரும்பிய சிற்றா அவனைப் பார்த்துச் சிரித்தான்.

"சகோதரியையா பணயம் வைத்தாய்...? உனது சேவலும் ஒரு சண்டைச் சேவலா?"

திடீரென கறுப்பு செட்டைகள் புடைத்து நிற்கச் சிவப்பைத் தாக்கத் தொடங்கியது. தாக்கலின் தீவிரத்தில் சிவப்பு தரையில் உருண்டது.

பார்வையாளர்கள் கறுப்பை உற்சாகப்படுத்திக் கத்தினார்கள். இரண்டாவது முறையாக சிற்றா அதிர்ந்தான்.

"நேற்றிரவும் இவன் அதிர்ச்சிக்குள்ளானான்."

காற்று இடைமறித்துச் சொன்னது. பின்பு கதையின்



திசை மாறிப் போயிற்று.

*****

சிற்றாவும் தனக்கு நடந்தவைகளை எண்ணிப் பார்த்தான். நேற்றிரவு சேவலைச் சண்டைக்கு எடுத்துச் செல்லும் கூட்டினுள் விட்டு விட்டு இருளினுள் நடந்தான். அவனுக்கு அது தேவையென்றிருக்கவில்லை. ஆனாலும் பழக்கத்தையும் விட முடியவில்லை. பார்வதியின் தொடர்புக்குப்பின் இது அருவருப்பானதும் தேவையானதுமா? அதை நிறுத்தவும் அவன் விரும்பவில்லை. காற்றும் அவனுடன் சேர்ந்து சொய்டாவின் வீட்டிற்குள் நுளைந்தது. அங்கிருந்த விளக்கைச் சுற்றிச் சுற்றி வந்தது.

விளக்குத் தன்னை அணைக்கச் சொல்லி முனகியது.

விதவை சிற்றா ஓர் கொடிபோல் அவனைச் சுற்றிப் படர்ந்து கிடந்தாள். அதிகாலையில் அவன் புறப்படத் தயாரானபோது அவள் அவனை விடவில்லை.

“கோபாலனுக்கு உன்னைப் பற்றி எல்லாமே தெரியும். நம்மைப் பற்றியும் தெரியும். அவளை மறந்து விடு சிற்றா. அவள் தமிழ்ப் பெண். தோட்டத் தமிழ் பெண். கோபாலன் கூட....”

சிற்றா அவளை உதறிவிட்டு எழுந்தான்.

“அப்படியானால் நீ கோபாலுடன் படுக்கிறாய். என்ன பெண் நீ?”

அவளைக் கிட்டத்தட்ட மூச்சுத் திணறும்வரை கழுத்தைப் பிடித்து நெரித்தான். அவளோ அவனது குற்றச்சாட்டை மறுத்தாள். காதைப் பொத்தி அறைந்துவிட்டு இருட்டினுள் தனது சாறத்தைக் கட்டியபடி நடந்தான்.

காற்றிற்கு இந்த வாடிக்கை பற்றித் தெரியும். சண்டைக்கு முன் சிற்றா பெண்களிடம் போவது அவனுக்கு ஒரு தெரப்பி போல. ஆனால் இந்த இரவில் தன்னைத் தானே சபித்துக்கொண்டு நடந்து கொண்டிருந்தான். இந்தப் பழக்கத்தை நினைத்து, இருட்டினில் தான் நக்கிய உதடுகளை நினைத்துக் காறித் துப்பினான். இரவில் நக்கியதன் உப்புக் கரிப்புப் போனதுபோல் தெரியவில்லை.

*****

ஏதோ கனவில் நடப்பதைப் போல் சிவப்பு தரையில் கிடக்கும் கறுப்பைத் தாக்குவதைப் பார்த்துக் கொண்டு நின்றான்.

“நான் எந்தப் பெண்ணிடம் போனாலும் பார்வதியைத்தான் அளவு கடந்து நேசிக்கிறேன். அவள் கைவிரல்களில் தேயிலைக் கொழுந்தின் வாசம். பற்கள் கோப்பிப் பூவைப் போன்றிருக்கும்.”

சிறகுகள் வாறா மலர்களைப் போல் எங்கும் விரவிக் கிடந்தன. சண்டையை இடைநிறுத்தியது போல் இரு சேவல்களும் களைப்பில் மூச்சு வாங்கிக் கொண்டு நின்றன. ஒன்று மற்றையதைச் சுற்றிச் சுற்றி வந்த வண்ணம் இருந்தன.

“இவனுக்கு என் சகோதரியை எப்படிக் கொடுப்பது. அதைவிட அவளைக் கடலுக்குள் தள்ளி விடலாம்.”

இனக்கலவரங்களில் தேசிய உணர்வு உச்சத்தை அடைந்த நேரங்களில் ஓர் கழுகினைப் போல் எல்லோர்க்கும் உயர சிற்றா எழுந்து நின்றான். தன்னுள் சுவாலித்த கோபத்தை அடக்கிக் கொண்டு உறுதியாகக் கடுமையான தொனியில் கட்டுக்கடங்காதவர்களையெல்லாம் தன் குரலால் அடக்குவதுபோல் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான்.

சிற்றாவின் நடவடிக்கைகளால் ஓர் தமிழன்கூட கிராமத்தில் தாக்கப்படவில்லை. சிலவேளைகளில் தலைமையைத் தானே கையிலெடுத்துக் கொண்டு மற்றவர்களிடம் சேர்ந்து கொள்வான். கோபால் இதைத்தான் நினைத்துப் பார்க்கிறானென எங்களுக்கும் தெரியும். இதுபோன்ற சிறிய சிறிய கதைகளும் இந்தக் காட்டுக் குடிசை வீடுகளை வந்தடையாமல் போகவில்லை. பார்வையாளர்கள் சண்டையின் ஆர்வத்தில் அமிழ்ந்து போயிருந்தனர். சாப்பாட்டைப் பற்றிக்கூட அவர்கள் கவலைப்படவில்லை. கசிப்புப் பீப்பாய்கள் வந்து திரும்பிப் போயின. நேரம் பன்னிரண்டைத் தாண்டி விட்டிருந்தது. சண்டையிடுவதை விட்டு விட்டுச் சேவல்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ள வளைய வந்து கொண்டிருந்தன.

*****

முன்னைய இரவு வீடு திரும்பிய சிற்றா, கோழி ஒன்று சேவலால் குதறப்பட்டுக் கிடப்பதைக் கண்டான். கோழியின் உடலெல்லாம் மலம் ஒட்டிக் கிடந்தது. சேவல் ஓர் மூலையில் தூங்க முயற்சித்துக் கிடந்தது. கோழியை வெளியே எடுத்துக் கூட்டைப் பூட்டி விட்டு அவன் தூங்கப் போனான்.

அவனது கனவில் பார்வதி வந்தாள். தலைக்கு முக்காடிட்டு காது வளையங்கள் பளீரென மின்ன சிற்றா அவளின் காது மடலைத் தொட்டான். ஆனால் அவன் தொட்டது சிறிய கோழியின் கொண்டையை திடுக்கிட்டு முழித்தபோது கோழி ஒன்று கொக்கரித்துக் கொண்டு நின்றது. திடீரெனப் பாய்ந்து அவனைக் கொத்தத் தொடங்கியது.

நேரம் மதியம் 2:30மணி. இப்போதுதான் அவனுக்கு விளங்கியது அது கெட்ட சேதி சொல்லும் கனவென்று. ஐந்து மணித்தியாலங்களாக சண்டை நீண்டு போய் விட்டது. தனது சேவல் களைத்து விட்டதென அவனுக்குத் தெரிந்தது. சேவல் இதுவரை இப்படிக் களைத்ததே இல்லையே. இது எப்படிச் சாத்தியமாகுமென்று அவனால் நம்பமுடியாமல் இருந்தது.

“சண்டை பிடி... இறுதிவரை சண்டை பிடி.... சாகும்வரை சண்டை பிடி...” என்று கத்தினான்.

*****

பின்னேரம் சண்டை உச்சத்தைத் தொட்டது. இரு சேவல்களுக்கும் தண்ணீர் தெளிப்பதைப் பார்த்தவுடன் கற்களின்மீது உட்கார்ந்திருந்தவர்கள் எல்லோரும் சண்டையின் முடிவைப் பார்க்க எழுந்து வந்தனர். தெப்புவ செய்து விட்டது. அமைதி காதை வருத்தியது. ஒரு வினாடிக்குப் பின் செட்டைகள் ஒன்றோடொன்று மோதும் சத்தம் கேட்டது. சிவப்பின்மேல் ஏறி நிறிநின்ற கறுப்பு இறுதித் தீர்வை எழுத ஆயத்தம் செய்தது. தீர்ப்பு மிக ஆறுதலாக நோக்காடாகச் சிவப்பின் மேல் இறங்கியது. சிசப்பு தனது எஜமானைப் பரிதாபமாகப் பார்த்தது. அது எப்போதுமே போர்த்தந்திரங்களுக்கு தன் எசமானைத்தான் நம்பி இருந்தது.

“பொலிஸைக் கூப்பிடுவோம்” கபறாவ இலைமீது சிறுநீர் கழித்தவாறே எக்மோன் சிங்கோ சொன்னான். அவன் சிவப்பின் மேல்

200ரூபா கட்டி இருந்தான். பொலிஸார் சண்டையிடத்தை நோக்கி புறப்பட்டிருப்பதை கூட்டம் உணர்ந்து கொண்டது. பொலிஸ் வந்தால் சண்டை நிறுத்தப்படும். சிங்கோவின் பணத்திற்குப் பழுதில்லை. எப்படி முயற்சித்தும் கபறாவ இலையைத் துளைக்குமளவிற்கு அவனுக்கு மூத்திரம் பெய்ய முடியவில்லை.

எசமான் சிற்றா மேலும் மேலும் பலமிழந்து கொண்டிருக்கும் தனது சேவலின் பக்கத்தில் நிலை குலைந்து நின்றான்.

“கடவுளே நீ இறங்கி வா. எனது சேவலை வெற்றி பெறச் செய். நான் பார்வதியை இழக்கப் போகிறேன்” என வேண்டிக் கொண்டான். மோட்சத்தில் இருந்து கடவுள் இறங்கி வரவில்லை. கொய்யாமரப் புதரினூடு பார்வதி இறங்கிச் சண்டை மைதானத்திற்கு வந்தாள். வள்ளி அம்மன் போல் வந்த அவளை யாரும் அங்கு எதிர்பார்க்கவில்லை. வந்தவள் இரண்டு சண்டைச்சேவல்களையும் கழுத்தைப் பிடித்துத் தூக்கிப் பிரித்தெறிந்தாள். ஒவ்வொன்றும் அதனதன் எசமான்கள் காலடியில் கிழிந்துபோன தலையணைகள் போல் வீழ்ந்தன. பஞ்சு போல் இறகுகள் சிதறிப் பறந்தன.

“இன்று என்ன நாளென்று உனக்கு மறந்துபோய் விட்டதா?” சகோதரனைப் பார்த்து முகம் சுளித்தாள் பார்வதி. இந்த இடைவெளியில் சிவப்புச் சேவல் எழுந்து பற்றைக்குள் புகுந்து கொண்டது.

கோபால் சிற்றாவை நெருங்கி “எப்படிப் பார்த்தாலும் தோற்றவன் நீதான்.” முதலில் சிவப்புச் சேவலைச் சுட்டிக்காட்டியவன் பின்பு திரும்பி வந்த வழியே நடந்து போய்க் கொண்டிருந்த சகோதரியைக் காட்டினான். தனது கறுப்புச் சேவலைத் தூக்கிக் கொண்டு அவனும் வீடுநோக்கி நடந்தான்.

“இங்கு இதுதான் நடந்தது” எனச் சொல்லி மரம் கதையை முடித்தது.

*****

தனது சேவலுக்குத் தானே இழைத்த துரோகத்தைச் சிற்றா உணர்ந்தபோது எல்லாமே முடிந்துவிட்டது. ஒரு மணித்தியாலத்திற்கு முன்பே அவன் அதைக் கொன்றுவிட்டான்.

ரத்தா தான் பதுங்கியிருந்த பத்தைக்குள் இருந்து வெளியே வந்தது அவன் நினைவில் வந்தது. பத்தைக்குள் இருந்து வந்த ரத்தா செட்டைகளை அடித்துக் கொண்டு சண்டைக்குத் தன் எதிரியை அழைத்தது. அவனது கட்டுக்கடங்காத ஆத்திரத்தினால் அவன் அதைக் காலைப் பிடித்து தரையில் வீசி எறிந்தான். இதுவரையில் அவன் இப்படி நடந்துகொண்டதே இல்லை. இதுதான் முதல் தடவை.

இரண்டு மணித்தியாலம் கழிந்த பின்புதான் பிழை செய்தது சேவலல்லத் தான்தானென்ற உண்மை உறைத்தது. என்னதான் பெரிதாகப் பிரசங்கம் வைத்திருந்தாலும் தான் விட்டதுதான் பெரிய தவறென்பதை தனக்குத்தானே ஒப்புக்கொண்டான்.

இதில் வேறு இந்த வாழ்க்கை, மறுவாழ்க்கை என்றெல்லாம் போதனை.

தனது பிழையைத்தானே மௌனமாக ஒத்துக் கொண்ட நேரத்தில் கோபாலன் வீட்டை நோக்கி வந்து கொண்டிருந்தான். “இவன் என்னைக் கொல்லத்தான் வருகிறான்” என்று நினைத்த சிற்றா மீன் வெட்டும் கத்தியை எடுப்போமா என யோசித்தான்.

“நான் உள்ளே வரலாமா?”

கோபாலனின் குரலில் பயம் தெரிந்தது. சிற்றா தன் மேல் கோபமாயிருப்பான் என்று அவன் நினைத்தான. அவனென்னைக் கொல்லட்டும் ஓர் சேவல்போல் நானும் சாகின்றேன். அவன் கோபாலை உள்ளே அழைத்தபோது எதுவித உணர்வுமின்றி முடிவை ஏற்பதுபோல் கூப்பிட்டான்.

“உள்ளே வா”

கோபால் செத்துக் கிடந்த சேவலைப் பார்த்தான்.

“இது செத்துப் போய்விட்டதா?”

இதைத் தவிர அவனால் எதையும் கேட்க முடியவில்லை.

“எனது கைகளால்தான் இறந்தது”

மணிக்கட்டிற்குக் கீழே தனது கைகளைத் தறித்துக் கொள்ளப் போவதுபோல் தனது கைகளை அருவருப்பாகப் பார்த்தான் சிற்றா.

“கடவுளே வேணாம்”

கத்திக் கொண்டே கைகளால் தலையைத் தாங்கிக் கொண்டான் கோபால்.

நிலவு இந்தச் சோகத்தை யன்னலினூடு பார்த்துவிட்டு இறந்த சேவலின் இறுதிச் சடங்கிற்காகத் தனது மஞ்சளுடையைக் கொடுத்தது. சிற்றாவின் இதயம் இளக இளக அவனது மூக்கு ஒழுகத் தொடங்கியது.

அவனது கண்களில் படிந்திருந்த கண்ணீர்த் திரை மெல்ல விலகியது.

கோபாலன் தான் வந்த விடயத்தைச் சொன்னான். இந்த நல்ல நாளில் நாம் எல்லாவற்றையும் மறந்துவிடுவோம்.

“பார்வதி எப்படியாவது உன்னைச் சாப்பாட்டிற்கு கூட்டி வரும்படி சொன்னாள். நீ வரும்வரை அவள் நிச்சயமாகச் சாப்பிடப் போவதில்லை.”

“உனது வீட்டிற்கா?”

சிற்றா ஆச்சரியத்துடன் தமிழில் கேட் டான்.

“ஆம்!”

கோபால் சிங்களத்தில் பதில் சொன்னான். கோபால் வீட்டிற்குப் போவதற்கு முதல் சேவலை புதைக்கக் குழி தோண்டிக் கொண்டே,

“உனது சேவல் திறமையானது” எனச் சிற்றா சொன்னான்.

“இருந்தும் என்ன பிரயோசனம்? ஐய்யே, அது வீட்டிற்குப் போகும் வழியிலேயே இறந்து விட்டது.”

“ஐயோ சிற்றா”

என்று அந்தச் சேவல் சண்டைக்கார இளைஞன் துக்கம் தாளாது அலறினான்.

A srilankan Mosaic
Short stories from Sinhala & Tamil
ISBN 955+582-0941-4
Published by Three Wheeler Press

Story by Nissanka Wijemane
Title: The fighting cock - Pora Kukula
Sinhala to English : A. T. Dharmapriya

*திப்புவ - மகிழ்ச்சியான மொழுதுகளின் பறை இசை

*ரத்தா - சிவப்பன் ; *களுவா - கறுப்பன்